உ

சிவமயம்

யா / இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்

நிறுவுனர்

வள்ளல் ஏழூர் இராசரத்தினம்

அவர்களின்

அறுபத்தோராவது ஞாபகார்த்த விழா

நினைவுப் பேருரை

# திருவாசகத் தேன் துமி


ஆசிரியர் செ. பாலச்சந்திரன்

(யா/வைத்தீஸ்வரக் கல்லூரி)


2010.11.21

தீபத் திருநாள்

# திருவாசகத் – தேன் தூமி

"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது"

என்கிறார் தெய்வப்புலவர் திருவள்ளுவர் ஏழூர் வள்ளல் இளவாலைச் சைவத் தமிழ் மக்களுக்காக ஆற்றிய பணி மகாத்தானது. சேர் பொன் இராமநாதன், புத்தூர் மழுவராஜர், ஏழூர் வள்ளல் இராசரத்தினம் போன்றவர்கள் செய்த தருமச் செயலினால் இன்று சைவத் தமிழ் மக்கள் வாழ்வு ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றது.

"ஏழுரைப் போல எடுத்த கருமத்தை
வாழ்வூரச் செய்யும் வலிபடைத்தோர்
யாழ் ஊரில் யாரையுமே காணோம்
இளவாலை ஈன்றெடுத்த தீரர் இவர் என்கை தெளிவு"

என்று நிறுவுனரின் சிறப்பைப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் வியந்து பராட்டுவர்.

இப்பாடசாலைச் சமூகமும், இவ்வூர் மக்களும் நன்றிமறவாத சிந்தையர்கள். கடும் மாரிமழைக்காலம், நிறைந்த பௌர்ணமி நாள் அடாது மழை பொழிந்தாலும் எம்கருமம் முடிப்போம் எனக் கங்கணம் கட்டிக் கொண்டு நிறுவுனர் நினைவு தினத்தைக் கொண்டாடுவர், சிறப்பாக கார்த்திகை மாதத்தீபத் திருநாளில் தீபமாகி ஒளிபரப்பிய வள்ளல் ஏழூரருக்கு மெய்கண்டான் சமூகம் இடைவிடாது இவ்விழாவை எடுப்பது தெய்வத்திருவருளே. இக் கல்லூரிக்கு நான் 1998ஆம் ஆண்டு ஆடி மாதம் தொடக்கம் ஆசிரியராகப் பணியேற்றேன். சைவம் சிவசம்பந்தமானது இங்கே பாலர் முதல் விருத்தர் வரை சைவ அனுபூதி நிலையை உடையவர்களாக விளங்கியதைக் கண்டேன். கரையோரத்தை அண்டி வாழும் மக்கள் பெரும்பாலும் பெரும் சோதனைகளைச் சந்தித்து சாதனையாக்கியவர்களே இங்கு மதமாற்றத்துக்கு வலிந்து இழக்கப்பட்டாலும் சரி, சுனாமி போன்ற இயற்கை அனர்த்தம் ஏற்பட்டாலும் சரி. யுத்தம் போன்ற அசம்பாவிதம் ஏற்பட்டாலும் முதலில் பாதிப்படைபவர்கள் இம்மக்களே.

இதன் காரணமோ என்னமோ இவர்கள் Sprichuality யில் அதாவது ஆத்மீகத்தில் மிக்க நாட்டமுடையவர்களாக விளங்கியதையும், விளங்குவதையும் உணர முடியும். பாகுபாடு, வேற்றுமை கடந்த நிலை ஆத்மீகம் ஆகும். மனம் பக்குவமடைய வேண்டும் எனில் தாய், தந்தையரின் ஆசி வேண்டும். பெரியோரின் ஆசி வேண்டும். பக்தி சூத்திரத்தில் நாரதர் (சித்த) விருத்தியே "யோகம்" என்கிறார்.

**அன்பு :** சித்த விருத்தி என்றால் என்ன?

சித்த விருத்தி என்பது அன்பு. அன்பு மலர வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை மலர வேண்டும். அன்பு மலர்ந்தால் காமம், உலோபம், குரோதம், மோகம், மதம், மாச்சர்யம் என்பவை மறையும். அன்பு உனக்குள் மலர்ந்தால் சிவம் மலரும். இதனாலேயே திருமூலர் "அன்பே சிவம்" என்கிறார்.

**நன்றி :** நன்றி ஒன்றே எல்லாவற்றிற்கும் மூலம். நன்றி காரணமாகவே அன்புருவாகும். அன்பு வழிபடத் தூண்டும். அப்பர் பெருமான் நன்றிக் கடனாகப் பாடிய பாடல்களே திருவங்கமாலை

பாடல்கள் :

தலையே நீ வணங்காய் .........
கண்காள் காண்மின்களோ.......
வாயே வாழ்த்துகண்டாய்....
செவிகாண் கேண்மின்களே................
மூக்கே நீ முரலாய்..................
கைகாள் கூப்பித் தொழ.........
கால்களாற் பயன் என்......

இறைவன் தனு, கரணம், புவனம், போகம் என அந்தக் கரணங்கள் நான்கையும் கொடுத்து அதிலும் நாம் வாழும் புவனத்திலே நமக்காக நல்ல காற்று, நல்ல நீர், நல்ல ஒளி எல்லாவற்றையும் இலவசமாகத் தருவதோடு நல்ல தருக்களையும் அல்லவா தந்துள்ளான். தரு என்றால் என்ன?

இதற்கு ஏன் இப்பெயர் வந்தது? இவற்றை எல்லாம் நாம் ஆழ்ந்து சிந்திக்கும் போது தான் எமது நிலை புரியும்.

நன்றி உள்ளவர்க்குத் தான் நல்லோர் ஆசி கிட்டும். வாழ்வு வழிபாடாக மாறும். வாழ்வு வழிபாடாக மாறினால் அது தெய்வீகத்துக்கு இட்டுச் செல்லும். மனிதனைத் தூய்மைப்படுத்தும் இடம்தான் ஆலயம். இராமகிருஷ்ணர் பக்தனின் கண் தெய்வீகக்கண், பக்தனின் காது தெய்வீகக் காது தெய்வம் தெய்வத்தைப் பார்க்கிறது, கேட்கிறது" எனக்கூறுவார். இது முற்றிலும் அனுபவபூர்வமாக தெய்வீக வாக்கியம்.

இதனை சண்டேஸ்வரின் வரலாறு மூலம் சேக்கிழார் உணர்த்தூகிறார். சிவபூசையில், சிவபக்தியில் மூழ்கியிருக்கிறார். விசாரசருமா ஆகிய சண்டேஸ்வரர். சிலரின் தூண்டுதலால் கோபத்துடன் வரும் எச்சதத்தன் ஆகிய சண்டேஸ்வரரின் தந்தை பாற்குடங்களைக் காலால் இடறி அவரது சிவபூசைக்கு இடையூறு செய்தார். தனது பூசைக்குத் தடைவந்த போது உலக நினைவு வரப்பெற்ற விசாரசருமா அருகே இருந்த தடியால் அக்காலை நோக்கி வீசி அடித்தார். அத்தடி மழுவாகி அவர் காலைத் துண்டித்தது.

இதென்ன தடி எப்படி மழுவானது? மழுயாருடைய ஆயுதம்? மழுப்படை சிவனின் ஆயுதம் எனவே சிவபூசையில் இருந்த விசாரசருமா சிவனே ஆகிவிட்டார். அவர் அடித்த தடி சிவனின் மழுப்படையாகிவிட்டது. இதனையே மெய்கண்டார் தமது சூத்திரத்தில் "அவனே தானே ஆகிய அந்நெறி" ........ எனக் குறிப்பிட்டுள்ளார். சேந்தனார் திருப்பல்லாண்டில்

திருச்சிற்றம்பலம்
"தாதையைத் தாளற வீசிய சண்டிக்கும்
அண்டத்தொடு முடனே
பூதலத்தொரும் வணங்கப் பொற்கோயிலும்
போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமுந்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே
திருச்சிற்றம்பலம்

எனப் போற்றிப் பாடியுள்ளார். எனவே நான் என்ற நிலை மாறவேண்டும். நாம் என்ற நிலை

உருவாகவேண்டும். இதனையே இங்கு நாம் எண்ணம், சொல், செயல் என்ற மூன்று வடிவிலே அனுபவித்துக் கொண்டு இருக்கிறோம். நிறுவுனரிற்கு நன்றி செலுத்துமுகமாக

கடந்த காலங்களில் பல சோதனைகளையும், வேதனைகளையும், இழப்புக்களையும் கண்டு அவற்றிற்கு எதிராக எதிர்நீச்சலிட்டு அன்பு, அறம் என்ற அடித்தளங்களில் மீண்டும் புத்தெளிச்சியுடன் நிமிர்ந்து நிற்கிறது இப்பாடசாலை.

பெரியபுராணத்தில் பேசப்படும் அறுபத்து மூன்று அடியார்களில் குங்குலியக்கலயர் என ஒருவர் இருந்தார். இவர் சிவத்தொண்டுடன், சிவனடியார் தொண்டும் செய்பவர். சிவபிரானுக்குக் குங்குலியத் தூபம் இட்டு வாழ்ந்து மகிழ்ந்தவர். திருக்கடவூரில் வாழ்ந்து வந்த இவரைப் பெருமான் சோதிக்கின்றார். வறுமையைக் கொடுத்து இவர் செம்மையானவரா? எனப் பரிசோதிக்கின்றார். உண்ணும் உணவுக்கே தளப்பம் ஏற்படுகிறது. மனைவியும் பிள்ளைகளும் பட்டினியால் வாடுகின்றனர். அப்போது கணவனின் கவலை தோய்ந்த முகத்தையும், சிவதொண்டு தடைப்படுகிறதே என்ற நன்நோக்கிலும் எதை ஒரு மங்கலப் பெண் இழக்க விரும்பாளோ அதைத் தன் கணவன் விருப்பம் நிறைவேற வேண்டும் என்று கருதி தன் தாலியைக் கழற்றிக் கொடுக்கிறார் விற்பதற்கு. நடந்தது என்ன? தாலியை குங்கலியக்காரன் ஒருவனிடம் கொடுத்து குங்குலியம் பெற்றுத் "தன் கடன் பணி செய்து கிடப்பதே" என்றவாறு செயற்பட்டார். வீட்டை மறந்தார். வாசலை மறந்தார். மனைவி பிள்ளைகளை மறந்தார். ஆனால் இறைவன் அவரையும் அவர் குடும்பத்தையும் மறக்காது அருள் புரிந்தார். இதனாலன்றோ பெரிய புராணத்தில் பேசப்படும் பெரும்பேறு பெற்றார்.

**தியாகம்:**

இதே நிகழ்வு இங்கும் நிகழ்கிறது. ஏழூரர் பாடசாலையைக் கட்டிக் கூரைபோடும் அளவிற்கு வந்துவிட்டது. ஆனால் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. எதுவிதமாகவேனும் இக்காரியத்தை நிறைவேற்றலாம் என்றால் முடியவில்லையே என மனஞ் சோர்ந்து காணப்பட்டார் ஏழூரர். ஓடு போடக் காசு இல்லையே என ஓய்ந்து போய் இருந்த ஏழூரர் முன் வந்த அவர் தர்மபத்தினி ஆகிய சின்னப்பிள்ளை தன் கழுத்தில் இருந்த திருமாங்கல்யத்தைக் கழற்றிக் கொடுத்து உதவினார். தன்னலமற்ற தொண்டுக்கு, ஏழைப்பிள்ளைகள் வாழ்வுக்கு, சைவத்தின் எதிர்காலத்துக்கு வழிசமைத்தது அவர் தாலி. அவரின் தாலிப்பாக்கியம் இன்றுவரை எத்தனை ஆயிரம் பிள்ளைகளுக்குக் கல்விப் பாக்கியத்தை வழங்கியது, வழங்கி வருகிறது என்று சிந்தித்தால் புராணகால நிகழ்வு நிதர்சனமாகிறது இங்கு.

எனவே இப்பாடசாலையின் அடித்தளம் தியாகம், தன்னலமற்ற தொண்டு என்பவற்றால் இடப்பட்டது. பாடசாலையின் வாசகம் "வாழக்கல்மின்" இவ்வாசகம் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற வள்ளுவர் கூற்றுக்கு வழிகாட்டுகிறது. இப் பாடசாலையின் இலச்சினையும் பொருள் பொதிந்த சைவக்கலாசாரத்தை, சைவவிழுமியத்தை எடுத்துக் காட்டும் ஒன்றாகத் திகழ்கிறது.

தாமரை, ஏடு, தீபம், இடபம் என்பவற்றைத் தாங்கி நிற்கிறது. இங்கு கற்கும் மாணவர்கள் தண்ணளி மிக்கவர்களாகவும், ஞானம் உடையவர்களாகவும், அக ஒளி மிக்கவர்களாகவும், தருமத்தின் வழி செல்பவர்களாகவும் இருக்க வேண்டும். அதற்காக வாழக் கற்க வேண்டும். என்னும் அறநெறியைப் போதித்து நிற்கிறது.

எனவே தான் அந்த அறப்பொருளை நீங்கள் பற்றிப் பிடிக்க வேண்டும் என்னும் அவாவினால் திருமந்திரத்தில்

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான் பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப் பற்றத் தலைப்படுந் தானே.

எனக்கூறியவாறு நீங்கள் எங்களிடம் உள்ள திருமுறைகளைக் கொண்டு பற்றுங்கள். அப்போது நீங்கள் உங்கள் இலக்கை அடைய முடியும்.

அடுத்து வரும் மார்கழி மாதத்தில் இங்குள்ள அனைவரும் மாணவர்கள் ஆசிரியர்கள் உட்பட சைவத் தமிழர்களாகிய எமக்கு சிவப்பரம் பொருள் உவந்தளித்த பொக்கிஷங்களை திருமுறைகளைப் பேண வேண்டும். பேணி ஓத வேண்டும். அதிலும் திருவாசகம் என்னும் தேனைப்பருக வேண்டும். அதன் தித்திப்பை உணர வேண்டும் என்பதற்காக அதில் இருந்து ஒரு துளியை

"திருவாசகத் தேன்துமி" என்னும் தலைப்பில் சுவைக்குமாறு கேட்டு ஆரம்பிக்கிறேன் எனது உரையை.

இராமலிங்க வள்ளலார் திருவாசகத்தில் ஊறித் திளைத்ததன் பயன் ஆக எழுந்ததே வடலூர் வள்ளலாரின் திருப்பாடல்கள். அவர் திருவாசகத்தைப் பற்றி எப்படிக் கூறியிருக்கிறார் என்று பாருங்கள்.

வான் கலந்த மாணிக்க வாசக!
நின் வாசகத்தை நான்கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ்சாற்றில் தேன் கலந்து, பால் கலந்து செழுங்கனியின்
தீஞ்சுவை கலந்தூன் கலந்து உயிர்கலந்து
உவட்டாதினிப்பதுவே!

என்று மிகவும் உணர்வுபூர்வமாக அனுபவித்துச் சுவைத்த தன்மையை விளக்கியுள்ளார். எனவேதான் இப்படியான அன்பரின் இன்பநாளில் நன்றிமறவாத அன்பர் திருக்கூட்டத்திலே திருவாசகத் தேன்துமியைச் சிந்துகிறேன். சுவைத்திடுவீர்.

## திருவாசகத் தேன்துமி

திருமுறைகள் அன்பு நெறியையும் பக்தி நெறியையும் வளர்ப்பன. தமிழைப் பக்திமொழியாக்குவன பன்னிரு திருமுறைகள். மொழிக்கு நெகிழ்ச்சியை, இளமையை, கனிவை அளிப்பன திருமுறைகள் அதிலும் எட்டாம் திருமுறையாகிய திருவாசகம் ஒப்புயர்வற்றது. ஞான நெறியிலே நின்ற ஞானியரான மணிவாசகரது மணிவார்த்தை அஃது ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குவது ஆனந்தமான தேனினைச் சொரிவது. அதனை ஓதுவோர் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நிற்பர். திருவாசகம் இறையுணர்வினை எல்லோர்க்கும் அளிப்பது. ஓதுதற்கு எளியது: இனியது.

மாணிக்கவாசக சுவாமிகள் முத்தமிழ் வளர்ந்த மதுரை மாதகரின் கிழக்குத் திசையில் அமைந்த திருவாதவூர் என்னும் வயலும், வயல் சார்ந்த இயற்கைச் சூழலால் வளம்பெற்ற கிராமத்தில் அவதரித்தவர். அவர்தம் இனிய அனுபவத்தைப் பைந்தமிழ்ப் பாடலில் திருவாசகமாக வடித்துள்ளார். அஃது ஆன்மாவின் ஈடேற்றத்திற்கு உறுதுணையாவது. தித்திக்கும் திருவாசகம் மற்றைய மாதங்களைவிட மார்கழி மாத்தில் எத்திக்கும் ஒலிக்கும். மார்கழிக் குளிர் உடலைக் குளிர வைக்க திருவெம்பாவைப் பாடல்கள் உள்ளத்தைக் குளிரவைக்கும் மார்கழி திருவாதிரை பத்து நாட்களும் ஆலயங்களில் இடம் பெறும் அதிகாலைப் பூசையும், மணியோசையும், சங்கநாதமும் ஓர் இன்ப அனுபவத்தை ஏற்படுத்துவதுடன் திருவாசகப்பாடல்கள் உள்ளத்திலே உவகையை ஊட்டுவனவாகின்றன.

மாணிக்கவாசகப் பெருமானின் திருவார்த்தையாம் மணிவாசகம் பற்றி வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடும் இயல்பினராகிய வள்ளலார். "திருவாசகத்தைக் கேட்ட பொழுது அங்குள்ள

கீழ்ப்பறவைச் சாதிகளும், பொல்லாவிலங்குகளும் மெஞ்ஞானம் பெறும் என்றால் நான் அடைதல் வியப்பில்லையே" எனத் திருவாசகத்தின் இரசவாதச் சிறப்பைப் போற்றி வியக்கின்றார்.

மேலைநாட்டுப் பெரும்புலவர் G.U. போப் ஆன்ம அனுபவச் செழிப்பில் விளைந்த தன் அனுபவப் பாடல்களே திருவாசகம்" எனப் பாராட்டியுள்ளார். அது மாத்திரமல்ல அதை நன்கு கற்றுணர்ந்து, அதற்கு விளக்கவுரையும் எழுதியுள்ளார். திருவாசகத்தை அனுபூதி நிலையிலே உணர்ந்தவர்களாகிய சான்றோர் "விளக்கிக் கூற இயலாத அருள் இன்ப உணர்வுகளை உருக்கும் நிலையில் உருகி உருகி மணிவாசகர் போல் எவரும் விளக்கிக் கூறமுடியாது" என்பர்.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் நால்வர் மணிமாலையில் பின்வருமாறு திருவாசகத்தின் சிறப்பை விளக்கியுள்ளார்.

"திருவாசக மிங்கொருகால் ஓதில்
கருங்கல் மனமும் கரைந்துக் கண்கள்
தொடுமணற் கேணியில் சுரந்து நீர் பாய
மெய்மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுனர் அன்றி
மன்பதையுலகில் மற்றையோரிலரே"

திருவாசகத்தை உணர்ந்து ஆய்ந்து அதற்குப் பல பெரியோர்கள் விளக்கம் செய்துள்ளனர். மறைமலையடிகள். பண்டிதர் அருளம்பலவனார், கா. சுப்பிரமணியபிள்ளை, G.U. போப்பையர். சுவாமி சித்ருபாந்தா எனப் பல பெரியோர்கள் அறிவியல் ரீதியாகவும், ஆத்மீக நிலையிலும் நின்று விளக்கியுள்ளனர். அவ்வாறன்றி பல பெரியார்களுடன் சேர்ந்த காரணத்தாலும், இறையருளின் காரணத்தினாலும் திருவாசகத்தை எட்டிப்பார்க்க முடிந்தவகையில் "தோள்கண்டார் தோளே கண்டார்" என இராமலாவண்யத்தை கம்பர், விளக்க முற்பட்டதைப் போல திருவாசகம் என்ற தேனின் துமியாக திருச்சதகத்தினைத் தொட்டுக்காட்ட விளைகின்றேன். இக் கட்டுரை வாயிலாக.

சிவபுராணம் முதலாக அச்சோப்பதிகம் ஈறாக அறுநூற்றைம்பத்தெட்டு (சில நூல்களில் 656) பதிகங்களில் ஒரேயொரு பதிகத்தை மட்டுமே எடுத்து அதிலும் உள்ள உபபிரிவுகளில் உள்ள ஒவ்வொரு பாடலை மட்டுமே உதாரணம் காட்டி கோணேசப் பெருமானின் திருவருளின் துணைகொண்டு வரையப்படுவதால் இது துளியிலும் சிறு சிதறலாக விழும் "துமி"யேயாகும் என்பதால் "திருவாசகத் தேன்துமி" எனத் திருவருள் தலைப்பிட்டு எழுத வைத்துள்ளது. துமியானாலும் தேன் தித்திப்பானது.

திருவாசகத்தில் உள்ள திருச்சதகம் ஐந்தாவது பதிகம் ஆகும். இ∴து திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டது. இத்தலத்திலேயே மாணிக்கவாசக சுவாமிகள் குருவருள் பெற்றார். மெய்யுணர்தல், அறிவுறுத்தல், கட்டறுத்தல், ஆன்மசுத்தி கைம்மாறு கொடுத்தல், அநுபோக சுத்தி, காருணியத்து இரங்கல். ஆனந்தத்து அழுந்தல், ஆனந்த பரவசம், ஆனந்தாதீதம் என்ற பத்து பிரிவகளில் பதிகமாகி நூறுபாடல்களைக் கொண்டதால் இது திருச்சதகம் எனவாயிற்று. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒவ்வொரு பாடலாக நோக்கி உணரலாம்.

அவ்வகையில் "மெய்யுணர்தல்" என்னும் பக்தி வைராக்கிய விசித்திரத்தை இத்திருப்பாடல் ஒன்றின் வாயிலாக நாமும் சுவைப்போம். யாருமே இதுவரை கூறமுடியாத அனுபத்தை வார்த்தை வண்ணத்தாலே வடித்துக் காட்டியுள்ளார்.

தமிழ் மொழியிலே இப்படியாக ஒரு பக்திப் பனுவலை கற்றும், கேட்டும், உணர்ந்து உருகவும் என்ன புண்ணியம் செய்தனம், எனக் கூறியமைதியடைய முடியுமே ஒழிய சாதாரணமான ஒரு மனிதப்

பிறவியாலே இதனையாக்க முடியாது. இதனாலன்றோ மாணிக்கவாசக சுவாமிகள் தெய்வமாக நோக்கப்படுகிறார். வழிபடப்படுகிறார். மார்கழித் திருவாதிரையில் பத்துநாட்களும் மாணிக்கவாசக சுவாமிகள் ஆலயங்களில் வீதி வலமாக எழுந்தருளச் செய்யப் பெறுகின்றார்.

மெய்யுணர்தலில் முதலாவது பாடலாகவும், திருவாசகத்தில் 5ஆம் பாடலாகவும் இடம்பெறும் இத்திருப்பாடலில் பக்தி அனுபவம் காரணமாக உடலில் ஏற்படும் **மெய்பாட்டையும்** விளக்கி உணரும்படி செய்கிறது. இப்பாடல் அது வருமாறு.

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்
துன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்றும்
கைதான் நெகிழ விடேன் உடை
யாயென்னைக் கண்டுகொள்ளே.

அனுபவித்துணர்ந்த தன்மையினாலே அவர் வார்த்தை அவருக்குதவியது போலும் இவ்வாறு

திருச்சதகத்தில் அடுத்து "அறிவுறுத்தல்" என்ற தலைப்பிலே தன் ஆத்மாவின் நிலையை உணர்ந்து உலகத்து சிவானுபவம் பெற விளையும் ஆத்மாக்களுக்கு அறிவுறுத்துகிறார் இவ்வாறாக.

நாடகத்தாலுன்னடியார் போல்நடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் உடையானே

இப் பாடல் திருவாசகத்தில் 15ஆம் பாடலாக உள்ள ஓர் உள்ளத்தை நீ அளவிட, அறிய கூறிவைக்கப்பட்ட **அறிவுறுத்தல்** பாடலாகும். இதே போன்று இப்பகுதியில் உள்ள இருபத்து நான்காம் பாடலும் இத்தகையதே. பாடல் வருமாறு.

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே.

திருச்சதகத்தில் அடுத்த பகுதியான **"கட்டறுத்தல்"** பாசமாம் பற்றறுத்துப் பரமனடியை எய்தும் நிலையைத் தம் அனுபவமாக உணர்ந்துணர்ந்து கூறுவது பக்தியின் உச்ச வெளிபாடாகும்.

சிந்தனை நின்தனக்காக்கி நாயினேன் தன்
கண்ணிணை நின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்களார
வந்தனை ஆட்கொண்டுள்ளே புகுந்தவிச்சை
மாலமுதப் பெருங்கடலே. மலையே யுன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனியனேற்கே

(30ஆம் பாடல்)

இத் திருப்பாடலை சேக்கிழார் பெருமானின் பெரியபுராணப் பாடலான "ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பரும் கரணங்கள் நான்கும் சிந்தையேயாக..............." என்ற பாடலுடன் ஒப்பு நோக்கி உணரலாம்.

திருச்சதகத்தில் அடுத்து விழும் துமி **"ஆன்மசுத்தி"** என்ற பகுதியாகும். ஆன்மா சுத்தியடையும் தகுதிப்பாட்டிற்கு யாது செய்ய வேண்டும். அப்படிச் செய்கின்றாயில்லையே என விசாரமுறும் தன்மையை இத்திருப்பாடல் மூலம் உணர்த்துகிறார். இப்பாடலை ஒத்த பொருள் விளக்கமுடைய திருப்பாடலை அப்பர் பெருமானும் அருளிச் செய்துள்ளமையை ஒப்பு நோக்கலாம். (நிலைபெறுமா றெண்ணுதியேல்....) இரு அருளாளர்களும் ஒருங்கே உணர்ந்தார்கள் என்பதை நாமும் உணர்ந்தால் பயன் பெறலாம். இதனை முப்பத்தைந்தாவது (35) பாடல் இவ்வாறு விளக்குகின்றது.

ஆடுகின்றநிலை கூத்துடையான் கழற்
கன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைதப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றது மில்லை
துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவு தோறலறிலை
செய்வதொன்றறியேனே.

என ஆன்மாவை எவ்வாறு சுத்தி செய்யலாம் என்று உணர்ந்து நெகிழந்து நெகிழ்ந்து நெக்குருகி நிற்பதைக் காணலாம். இதனாலேயே அப்பர் பெருமான்
"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்பர் பொன்னார் சடைப் புண்ணியன்"...

எனப் போற்றி நிற்பதையும் நோக்கலாம்.

**"கைம்மாறு கொடுத்தல்"** என்ற திருச்சதகத்தின் அடுத்த பகுதியில் அரனின் திருக்கட்சியை உள்ளவாறு தரிசித்தும் அதனை அகக் காட்சியாக மனத்திலே நிலைநிறுத்தி ஆனந்தத்திலே அழுந்த முடியவில்லையே, இது என்ன கண் மாயமோ எனக் கலங்கும் ஒரு நிலையை 46ஆவது பாடலில் இவ்வாறு விவரணம் செய்கின்றார்.

உண்டொர் பொருளென்றுணர்வார்க் கெலாம்
பெண்டிர் ஆண் அலி யென்றறியொண்கிலை
தொண்டனேற் குள்ளவா வந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலேன் என்ன கண் மாயமோ.

திருச்சதகத்தில் **"அநுபோக சுத்தி"** என்ற அடுத்த பகுதியில் ஒரு பாடலை நோக்கினால் (59ஆம் பாடல்)

உமையம்மையை பாகமாகப் பூண்டு அர்த்த நாரீஸ்வரராகத் தானே வந்து என் தலையழித்தாட்கொண்டவர் தேனாகவும், அமுதமாகவும், கரும்பஞ்சாறாகவும் சுவைதரும் தில்லைக்கூத்தனாகி உன் அடியவர்கள் நின் கழலை அடைய ஊன் பொதிந்த உடலை புழுக் கூட்டைக் கொண்டு நான் உனக்காகக் காத்திருக்கிறேனே என உருகுவதை உணரலாம். அப்பாடல் வருமாறு.

"மானேர் நோக்கி உமையாள்
பங்கா வந்திங்காட் கொண்ட
தேனே அமுதே கரும்பின்
தெளிவே சிவனே தென்தில்லைக்
கோனே உன்தன் திருக்குறிப்புக்
கூடுவார் நின்கழல்கூட
ஊனார் புழுக்கூடிது காத்திங்
கிருப்பதானேன் உடையானே.

திருச்சதகத்தின், **காருணியத் திரங்கல்** என்னும் பகுதியில் 65ஆம் பாடல் தொடக்கம் 74ஆம் பாடல் வரை மிக எளிமையாகத் தமிழில் அர்ச்சனை செய்வார்க்கு இறைவன் கருணை கூர்ந்து இரங்கி அருள் பெறப்பெரு வாய்ப்பாய் அமையும் திருப்பாடல்கள் இவையாகும். 66ஆம் பாடலை இதற்கு ஒரு உதாரணப் பாடலாக இங்கு தருகிறோம்.

போற்றியோ நமச்சிவாய
புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோ நமச்சிவாய
புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றியோ நமச்சிவாய
புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சிவாய
சய சய போற்றி போற்றி

திருச்சதகத்தின் **ஆனந்தத்து அழுந்துதல்** என்ற பகுதியில் தமது சிவானுபவத்தை எவ்வாறு வார்த்தைகளின் மூலம் தொகுத்து வழங்கியுள்ளார்.

ஆஹா என்ன ஆனந்தம். அவ்வானந்தத்துள்ளே மூழ்கி, மூழ்கி எழுகிறார் மாணிக்கவாசகர். அதனைத் தம் மணிவார்த்தையால் 78ஆம் பாடலில் விளக்கியுள்ளார்.

வேண்டும் நின் கழற்கணன்பு
பொய்மை தீர்த்து மெய்மையே
ஆண்டு கொண்டு நாயினேனை
ஆவ வென்றருளு நீ
பூண்டு கொண்டு அடியனேனும் போற்றி
போற்றி யென்று மென்றும்
மாண்டு மாண்டு வந்து வந்து
மன்ன நின் வணங்கவே.

அடுத்துள்ள **ஆனந்த பரவசம்** என்ற பகுதியில் பரவச நிலையின் உச்சநிலையில் நின்று, இறுதிப்பாடலில் மூலம் இவ்வாறு விளக்குகின்றார்.

யானே பொய் என் நெஞ்சும்
பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனை வந்துறு மாறே.

மாணிக்க வாசகப் பெருமான் ஒருவர் தான் ஆனந்தத்தின் அதீதம் பற்றி வாக்கால் வழுத்தியுள்ளார். "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பர். அது போல திருச்சதகத்தின் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள ஒவ்வொரு பாடல் மூலம் மட்டுமே சுவைக்க முடிந்தது. இதனாலேயே திருவாசகத் துமி எனத் தலைப்பிட்டேன். இக்கட்டுரைக்கு என் சிற்றறிவுக்கு எட்டியவரை, மாணிக்க சுவாமிகள் திருத்தலத்துக்கு திருவாதவூர் சென்று தரிசித்த பேறும்

திருவாதவூரடிகள் புராணத்தைச் சுவைத்துப் படித்து இன்புற்ற பயனும் இக் கட்டுரை எழுதும் பெரும் பேறை எனக் களித்தது எனலாம். எனவே மாணிக்கவாசகசுவாமியின் பாடலைத் தம்கைப்பட எம்பெருமானே எழுதிய பெருமை பெற்றது என்றால் அந்த ஆனந்தாதிதத்துள் திளைக்க இத் திருப்பாடலில் மூழ்கித் திளைப்போம்.

வான நாடரும் அறியொணாத நீ
மறையிலீறு முன் தொடரொணாத நீ
ஏனை நாடரும் தெரியொணாத நீ
என்னையின்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடுவித்தவா
உருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடுவித்தவா
நைய வையகத் துடைய விச்சையே

இக் கட்டுரையை எழுதத் தூண்டிய திருவருட் சக்தியை மணிவாசகரின் இறுதிப் பதிகமாகிய அச்சோப்பதிகத்தின் இறுதிப் பாடலாகிய

செம்மைநலம் அறியாத சிதடரொடும் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன் தாள்
நம்மையும் ஓர் பொருளாக்கி நாய் சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியாவா றார்பெறுவார் அச்சோவே
எனக் கூறி வழ்த்துவோமாக...
"போற்றி ஓம் நமச்சிவாய....."

சுபம்

தயாரித்தவர் : செ. பாலச்சந்திரன்
ஒப்பம் :

விலாசம் : 916, கே.கே.எஸ், வீதி,
யாழ்ப்பாணம்.